www.tamilarangam.net

# 124 இந்தியாவின் தயவு வேண்டும்!

பாவை சந்திரன்

கிட்டு தனது பேட்டியில், விடுதலைப் புலிகள் மற்றும் ஈழத் தமிழ் மக்களின் வருங்காலம் பற்றி எல்லாம் விரிவாகவே விளக்க முற்பட்டார். இந்திய அமைதிப் படை வெளியேற வேண்டும் என்று தாங்கள் கூறவில்லை என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்.

**கேள்வி:** பேச்சுவார்த்தை வெற்றிபெறும்போது,

விடுதலைப் புலிகளின் எதிர்கால நடவடிக்கைகள், நோக்குகள் யாவை?

பிற போராளிக் குழுக்கள், இந்திய அரசு, ராணுவம், தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன பற்றியவை?

**கிட்டு பதில்:** பேச்சுவார்த்தை ஒன்று வெற்றிகரமாக நிறைவேறும்போது,

அ) யுத்த நிறுத்தம் நிரந்தரமாக்கப்படும்.

ஆ) எமது ஆயுதங்கள் இந்தியப் படையிடம் கையளிக்கப்படும்.

இ) இந்தியப்படைகளின் வடக்கு, கிழக்கில் எதிர்கால நிலைகளில் இணக்கம்.

ஈ) தமிழ் மக்களின் நிரந்தரப் பாதுகாப்பு, யுத்த அழிவு நிவாரணங்கள் போன்ற அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தும் விடயங்களில் இணக்கம்.

உ) செப்டம்பர் 28-ல் ஏற்பட்ட, தீட்சித்-பிரபாகரன் உடன்பாட்டின் எதிர்கால வடிவங்களின் இணக்கம்.

ஊ) தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை நிறைவு செய்யும் கொள்கைகளை ஒப்பந்தத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டு உள்ளடக்கவும், சில மாற்றங்களை இந்திய அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளவும் இணக்கம் காணல்.

எ) ஒப்பந்த விதிகளுக்கமைய தமிழ் மக்களின் பிரதிநிதிகளால் வைக்கப்படும் அதிகூடிய அதிகாரங்களைக் கொண்ட வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண சபையை அமைக்க இலங்கை அரசு சட்டமியற்றவும், அதற்கான புதிய அரசியல் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றச் செய்யவும் இந்திய அரசுடன் இணக்கம் காணல்.

ஏ) இவ்வாறு அமையப்போகும் மாகாண சபைக்கான தேர்தல் வாக்காளர் பட்டியல் தயாரிப்புக்குத் தேவையான அடிப்படை ஆண்டைத் தீர்மானித்தல்.

இவைபோன்ற விஷயங்களில் இணக்கமும், தீர்வும் கண்டிருப்போம் என்பதைக் குறிப்பிடுகின்றோம்.


நீண்டகாலப் போரின் அழிவுகளால் அவதிப்பட்டிருக்கும் எம் மக்களுக்கு நிம்மதி தேவை. இந்த இடைக்கால அமைப்பில் மக்கள் பயன் அடைய நாம் பாடுபடுவோம். எமது எதிர்கால அரசியலைப் பொறுத்தமட்டில் நாம் வைத்த நான்கு அம்சக் கோரிக்கைகள் ஏற்கப்படும்வரை சகலவிதமான ஜனநாயக வடிவங்களிலும் மக்களை அணிதிரட்டிப் போராடுவோம்.

இந்திய மக்களுக்கும் தமிழீழ மக்களுக்கும் இடையில் ஒரு நட்புப் பாலத்தை அமைக்க முயல்வோம். இந்திய அரசு எமது கொள்கைகளை ஏற்றுக்கொள்ள வைக்க, இந்திய மக்களிடம் ஆதரவு திரட்டுவோம்.

ஆயுதங்களைக் கையளித்த நிலையில் சிங்கள ஊர்க்காவல் படையினரிடமிருந்தும், சிறீலங்கா ராணுவத்தினரிடமிருந்தும் எமது மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இந்திய ராணுவத்திடமே ஒப்படைக்கப்படும். வடக்கு, கிழக்கின் எல்லைப் புறங்களிலுள்ள தமிழ் மக்களைப் பாதுகாக்க இந்திய ராணுவம் செயல்பட வேண்டி ஏற்படலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகளும், ஈரோஸ்"ம் திட்டவட்டமாக இந்த ஒப்பந்தத்தை ஏற்கவில்லை. அதேசமயம் பிற

## ‘ஈழத் தமிழரின் போராட்ட வரலாறு’



கிட்டு

இயக்கங்கள் எனப்படும் குழுக்களும் தமிழர் விடுதலைக்கூட்டணியும் தமது அடிப்படை அரசியற் கொள்கைகளை மண்ணில் புதைத்து தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்துள்ளன. இவர்களை தமிழ் மக்கள் அரசியல் சக்திகளாகக் கணிப்பதை விட்டுவிட்டார்கள். ஒரு பேச்சுவார்த்தையின் வெற்றிக்குப் பிறகு அமையும் தேர்தலில் இவர்கள் மக்களைச் சந்திப்பதில் எமக்கு ஆட்சேபணையில்லை. இவர்களுக்குப் பதில் கொடுக்க தமிழ் மக்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள்.

**கேள்வி:** இலங்கையில் இந்திய அரசின் செயற்பாடுகளை, பிடிப்பை மட்டுப்படுத்திக்கொண்டு இந்திய ராணுவம் படிப்படியாக வெளியேற வேண்டியதை கருத்தில் கொண்டு விடுதலைப் புலிகள் செயற்படுவார்களா?

**கிட்டு:** இந்திய ராணுவத்தை வெளியேற்றுவது-வெளியேற்ற முடிவெடுப்பது என்பது ஒரு பிரதான அரசியல் கோட்பாடாகும். அப்படிப்பட்ட ஓர் அரசியல் கொள்கையை இன்னமும் நாம் வகுக்கவில்லை. வகுக்கவும் மாட்டோம் என நம்புகின்றோம். ஆனால் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் பாதுகாப்பாக வசிக்கும் இடங்களில் இந்திய ராணுவத்தின் நடமாட்டமும் முகாம்களும் தேவையில்லை எனக் கருதுகின்றோம். அதே வேளை தமிழ் மக்கள் சிங்களக் குண்டர்களால் தாக்கப்படும் எல்லைப் புறங்களிலும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கும் இடங்களிலும் இந்திய ராணுவம் பாதுகாப்பளிக்க வேண்டிய தேவை உண்டு.

**கேள்வி:** மக்களின் தினசரி வாழ்க்கையில் ராணுவம் தலையிடாமலிருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா?

**கிட்டு:** ஆம்! எந்த ஒரு நாட்டில், மக்கள், தினசரி வாழ்க்கையில் ராணுவம் தலையிடுவதை விரும்புவார்கள்? பாதுகாப்பு இல்லை எனக் கருதும் இடங்களில் நிலைமை வேறு.

**கேள்வி:** இந்தியத் தலையீடு நிற்க வேண்டுமானால், இந்தியா இதை ஒரு கௌரவப் பிரச்னையாகக் கருதாமலிருக்க வேண்டுமானால் அதற்கு நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்?

**கிட்டு:** இந்தியத் தலையீடு நிற்க வேண்டுமென்று இன்னமும் நாம் கூறவில்லை. 40 ஆண்டு காலமாக பௌத்த சிங்கள இனவாத அரசாங்கங்களால், தமிழர்கள் ஏமாற்றப்பட்ட காரணத்தால், எமது உரிமைகளை வென்றிட, இந்தியாவின் தயவு எமக்கு வேண்டும். ஆரம்பத்தில் நடுநிலையாளனாக இருந்த இந்தியா இன்று ஒப்பந்தத்தின் பங்காளனாக மாறிவிட்டது. இந்து சமுத்திர வல்லாதிக்கத்தை நிலைநாட்டவும் தமது பாதுகாப்பைத் திடப்படுத்தவும் இந்திய ராஜதந்திரிகளின் அவசர முடிவே இவ்வொப்பந்தம். தமிழ் மக்களின் தேசிய விடுதலை வேட்கையின் ஆழத்தையும், அதன் வரலாற்றுப் பின்னணியையும் ஆழமாக உணரத் தவறிவிட்டதால் ஏற்பட்ட பிழை இந்த அவசர ஒப்பந்தம்!

இதன் பின்னர் அமைதிப்படையில் முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்தன. இதற்கு முன்பாக புனே வந்த ராஜீவ் காந்தி, ராணுவ மருத்துவமனையில் காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்த வீரர்களைப் பார்க்காமல் சென்றது குறித்து விமர்சனம் எழுந்தது. அதன்பொருட்டு ராஜீவ் காந்தி இன்னொரு நிகழ்ச்சிக்காக வந்தபொழுது ராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார். இலங்கை வடக்குப் பகுதியின் பிரச்னைகளைத் தீர்க்க ராணுவ நடவடிக்கை சரியாகாது என்று, முன்னர் தெரிவித்ததை தீபிந்தர் சிங் நினைவூட்டினார். விடுதலைப்புலிகளுடன் பேசித் தீர்வு காணுவதே சரியாக இருக்குமென்றும், அப்போது அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

சில வாரங்களில், தீபிந்தர் சிங், திருமணம் ஒன்றுக்காக சண்டிகர் செல்லவிருந்தபோது, ஏ.எஸ். கல்கத்திடம் பொறுப்பை ஒப்படைத்து இருந்தார். பணி மூப்பு மற்றும் பொறுப்பு வழியாக அவர் அந்த உயர்வைப் பெற இருந்தார். அதுமட்டுமன்றி அந்தப் பணியை அவர் மிகவும் விரும்பினார்.

தீபிந்தர் சிங் சண்டிகரில் இருந்தபோது தான், சர்தேஷ் பாண்டே நியமனமும், ஹர்கிரத் சிங் வெளியேற்றமும் நடைபெற்றது.

இதுகுறித்து பின்னொரு நாளில் ஜெனரல் சுந்தர்ஜியிடம் பேசிக் கொண்டிருந்தபோது இந்தப் பணிமாற்றம் சரியானதுதானா என்று வினவினார். அதற்கு சுந்தர்ஜி, ‘அவரது பணி மாற்றம் எனக்குப் பிறகு ஏப்ரலில் தளபதியாக வரவிருக்கும் வி.என். சர்மாவின் விருப்பம்’ என்று பதிலளித்தார்.

இந்நிலையில் தீபிந்தர் சிங் பிப்ரவரி 28-இல் பணியிலிருந்து ஓய்வு பெற இருந்தார். 1988-ஆம் ஆண்டு, லீப் ஆண்டு ஆனதால் பிப்ரவரி 29-இல் பணி ஓய்வு பெற்றார். இதனையொட்டி அவருக்குப் பல்வேறு பிரிவு உபசார நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தெற்குப் பகுதி பிரிவின் தளபதியானதால், இந்தியாவின் மிகப்பெரும் பகுதிக்கு அவர் பொறுப்பானவராக இருந்தார். புனேயிலிருந்து யாழ்ப்பாணம் வரை மிகப் பெரிய பரப்புக்கு தளபதி. எனவே பிரிவு உபசார விருந்தில் காலையில்- ஊட்டி வெல்லிங்டன்- மதிய விருந்து பலாலி (யாழ்ப்பாணம்)- இரவு விருந்து சென்னை. மறுநாள் காலை சென்னையில் காலை உணவு- மதியம் திருகோணமலை- இரவு கொழும்பு என்று நான்கு நாட்கள் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கொழும்பில் நடைபெற்ற விருந்தில் ஜெயவர்த்தனாவும் கலந்துகொண்டார். அவர் தீபிந்தர் சிங்கிடம், ‘ஓய்வு பெற்றதும் என்ன செய்யப் போவதாக’ கேட்டார். ‘பஞ்சாபை ஒட்டியுள்ள பாஞ்ச்குலாவில் தங்கப் போகிறேன்’ என்று தீபிந்தர் சிங் தெரிவித்தார். ‘பஞ்சாப், இந்தியாவில் ஆபத்தான இடமாயிற்றே’ என்று கருத்து தெரிவித்தபோது, ‘அது எனது ஊர்; சொந்த மண்! மேலும் கொழும்பைவிட பஞ்சாப் பரவாயில்லை’ என்றார். ஜெயவர்த்தனா பதில் பேசவில்லை. (தீபிந்தர் சிங் தனது நூலில்)

தீபிந்தர் சிங்கைத் தொடர்ந்து ஏப்ரலில் ஜெனரல் சுந்தர்ஜியும் ஓய்வுபெற்றார்.

**நாளை:**
**அன்னை பூபதியின் உண்ணாவிரதம்!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்